Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 5 ரம்ளான் 2 (18-1-64) சனிக்கிழமை 341

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறம்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட
எம். பரராசசிங்கம்
சேலம் பிடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்

மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தில்

# 1964-ம் ஆண்டு லைசன்ஸ் பெறுவதில் கஷ்டம்

## சிங்களச் சட்ட அமுலினால் வேலைகள் ஸ்தம்பிதம்

### தமிழ் உத்தியோகஸ்தர் மேசைகளில் பைல்கள் பெருக்கெடுக்கின்றன

கொழும்பு, வெள்ளி

சிங்களச்சட்ட அமுல், மோட்டார் போக்குவரத்து இலாகாவை வெகுவாகப் பாதித்திருப்பதாகக் கூறப்படுகிறது. பல வாகனங்களுக்கு 1964-ம் ஆண்டு லைசன்ஸ் பெறுவதில் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

50 சதவிகிதம் தமிழர்களைக் கொண்ட மோட்டார் போக்குவரத்துக் காரியாலயத்தில் வேலைகள் யாவும் சிங்களத்தில்தான் செய்யப்பட வேண்டுமென்று அண்மையில் மோட்டார் போக்குவரத்து அதிகாரி சுற்றுநிருபம் அனுப்பியிருந்தார். இச்சுற்றுநிருபத்தைத் தொடர்ந்து தமிழ் உத்தியோகஸ்தர்களின் மேசைகளில் பைல்கள் மலைபோன்று குவிக்கப்பட்டிருக்கின்றன.

1964-ம் ஆண்டு லைசன்ஸ்களைப் பெறுவதற்கு முன் தங்கள் வாகனங்களை மாற்றத்திற்காக அனுப்பியவர்கள், பதிவுப்பத்திரங்களைப் பெற முடியாததின் காரணமாக வாகனங்களுக்குரிய லைசன்ஸ்களை இன்னும் பெறமுடியாமல் கஷ்டமடைவதாகத் தெரிகிறது.

## கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் உதவி

### 49 இடங்களில் இலங்கையர் பயிற்சிபெறுகின்றனர்

கொழும்பு, வெள்ளி

சென்ற ஆண்டு கொழும்புத் திட்டப்படி இலங்கையில் டெலிபோன் உபகரணங்கள் அமைக்க பிரிட்டன் 10 லட்சம் பவுன் அளித்திருக்கிறது.

பிரிட்டனில் 49 புதிய இடங்களில் இலங்கையர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. நிர்வாகத்துறையில் 10 இடங்களும், என்ஜினியரிங் துறையில்

(2-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

ஆசிய-ஆபிரிக்க

## மகாநாட்டுக்கு ஹியூம்-எர்ஹார்ட் ஆதரவு

லண்டன், ஜன. 17

ஆசிய - ஆபிரிக்க மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டியது அவசியமானது என்றும், இதற்காகத் தீவிர ஆயத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் சர் டக்ளஸ் ஹியூமும், மேற்கு ஜெர்மன் பிரதமர் எர்ஹார்டும் விடுத்திருக்கும் கூட்டறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மகாநாடு பாண்டுங்கில் நடைபெற்றதைப் போன்று இருக்கவேண்டுமா இல்லையா என்பது குறித்து அவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. இரு தலைவர்களும் 2 நாள் லண்டனில் நடத்திய பேச்சுவார்த்தைகளில் மலேஷியா பிரச்னை பற்றியும் ஆராய்ந்திருக்கிறார்கள்.

## இன்று

இன்று பிற்பகல் 3 மணியளவில் சுந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் மகாமண்டபத்தைத் திரு வை. கந்தப்பச் செட்டியார் திறந்துவைப்பார். சொற்பொழிவுகளும், கதாப் பிரசங்கமும் நடைபெறும்.

## தகவல் முறையில் மாற்றம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் தகவல் முறைகளை திருத்தி அமைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. இப்பொழுதுள்ள முறையில் அமைச்சுக்களின் வேலைகள் பற்றி உரிய பிரசாரம் செய்யப்படாததே இதற்குக் காரணமாகும்.

## கொழும்பில் முன்னாள் கவர்னர்ஜெனரல் சோல்பரி

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் முன்னாள் கவர்னர்ஜெனரல் சோல்பரி பிரபு இன்று காலை "ஐவீரியா" என்ற கப்பலில் கொழும்பு வந்துசேர்ந்தார். இவர் இலங்கையின் கடைசி பிரிட்டிஷ் கவர்னர்ஜெனரலுமாவார்.

ராணிமாளிகையில் அவர் கவர்னர்ஜெனரல் வில்லியம் கோபல்லாவையைச் சந்தித்தார். சோல்பரிபிரபு இரு தினங்கள் ராணிமாளிகையில் தங்கியிருப்பார். உலக வனவிலங்கு நலப் பிரதிநிதியாக வந்திருக்கும் அவர், நாட்டில் பலவிடங்களுக்கும் சென்று வனவிலங்கு பாதுகாப்பு பற்றி ஆராய்வார்.

இவ்விஜயமாக அவர் பல மந்திரிகளையும் சந்தித்துப் பேசவிருக்கிறார். சுமார் 2 மாதங்கள் சோல்பரிபிரபு இலங்கையில் தங்குவார்.

## வாலிபர் வெட்டுகாயங்களுடன் இறந்து கிடந்தார்

### வழக்கறிஞர் மனைவி உட்பட மூவர் கைது

மாவிட்டபுரம், வெள்ளி

குப்பிளானைச் சேர்ந்த விஜயசிங்கம் சுப்பிரமணியம் என்னும் 28 வயது நிரம்பிய இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை மல்லாகம் — புன்னாலைக்கட்டுவன் ரோட்டில் வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்ததையொட்டி சுன்னாகம் பொலிசார் காலம் சென்ற வழக்கறிஞர் ஒருவரின் மனைவி உட்பட மூவரைக் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளார்கள். இக்கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் மற்றும் இரு நபர்களைப் பொலிசார் தேடுகிறார்கள்.

நேற்றுக் காலை காலம் சென்றவரின் சகோதரர் சுன்னாகம் பொலிசாருக்குச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிசார் உடனடியாக காலம் சென்றவர் இறந்து கிடந்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்தார்கள். விசாரணையின்போது காலம் சென்றவர் இறந்துகிடந்த இடத்திலிருந்து வழக்கறிஞர் தம்பிராசாவின் வீட்டுப்படலை வரை இரத்தக்கறை இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையின் பின் காலம் சென்ற வழக்கறிஞர் தம்பிராசாவின் மனைவி அன்னபூரணத்தையும், காலம் சென்றவருடன் சம்பவதினமிரவு சென்றவர்கள் எனக் கூறப்படும் குப்பிளானைச் சேர்ந்த கந்தையா தில்லைநாதன், சின்னப்பு சீனித்தம்பி ஆகிய மூவரையும் பொலிசார் கைது செய்து மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எச். எஸ். அத்துறுபானை முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். நீதிபதி சந்தேக நபர்களை இம்மாதம் 23-ந் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டுள்ளார். நீதிபதி ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்திய பின் காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரியை பிரேதபரிசோதனை செய்ய உத்தரவிட்டு பொலிசாரை மேற்கொண்டு புலன்விசாரணை செய்யும்படி உத்தரவிட்டு மேல்விசாரணையை 23-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு மூர்த்தி தலைமையில் பொலிசார் விசாரணை செய்துவருகிறார்கள்.

## கண்டி சைவமகாசபை கட்டிடம்பற்றி விசாரணை

### திரு. தென்னக்கோன் முன்னிலையில் பல தமிழ்ப் பிரமுகர்கள் சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

மத்திய மாகாண சைவமகாசபையின் கட்டடத்தை அரசினர் தமது உடைமையாக்கியதை ஆட்சேபித்து நடைபெறும் விசாரணை மீண்டும் இன்று லோரித் விமலானந்த தென்னக்கோன் முன்னிலையில் ஆரம்பமாகின்றது. மத்திய

(2-ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

சோஷலிஸம் ஒரு அழகான சொல். சோஷலிஸத்தைப்பற்றி நான் அறிந்த வரையில், அதில் எல்லா அங்கத்தினர்களும் சரிசமமானவர்கள். யாரும் தாழ்வு, உயர்வு என்பது கிடையாது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELANADU, National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone: 390

சனிக்கிழமை ... ஆண்டு
தை 5 உ (18-1-64)

## தமிழ்ப் பகுதி மூடப்படுமா?

தபால் தந்தி அதிபர் அலுவலகத்தில் இயங்கிவரும் தமிழ்மொழி பெயர்ப்புப் பகுதியை விரைவில் மூடிவிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் இப்பகுதியில் சிங்களம்மட்டும் சட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்படுவதால் இங்கு கடமையாற்றும் தமிழ்தொழிற்சங்க உறுப்பினர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. இதுபற்றி அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் தபால்தந்தி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கும் பிரதமமந்திரிக்கும் புகார் செய்துள்ளதுடன் தமிழ்த்தலைவர்களுக்கும் இதுபற்றித் தெரிவித்துள்ளதாம்.

இது உண்மையாயின் இதையிட்டு யாரும் கவலைகொள்ளாமலிருக்க முடியாது. பிரதமர் திருமதி சிறிமா புதுவருடதினத்தன்று விடுத்த செய்தியில் சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்படமாட்டாதென்றும் மொழிமாற்றத்தால் சிறுகஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவை விரைவில் நீங்கிவிடுமென்றும் உறுதியளித்திருந்தார். 'சிறுபான்மையினருக் அநீதி இழைக்கப்படமாட்டாது' என்பது பிரதமரின் பழைய பல்லவிதான் என்றாலும் சிங்களம்மட்டும் சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்த தினத்தன்று இந்த வாக்குறுதியைக் கொடுத்ததால் மக்கள் ஓரளவுக்கு அதில் நம்பிக்கை வைத்தனர். மேலும் அரசாங்கம் கஷ்டங்களை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதால் தமிழ்பேசும் மக்களின் அதிருப்தியைத் தேடிக் கொள்ளாமல் அதன் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறக்கூடுமென்றும் இதற்கு முன்னோடியாக அது தனது நல்லெண்ணத்தைச் செயலில் காட்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்பொழுது காரியங்கள் மாறாக நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கையில் அரசாங்கத்தின் நோக்கத்தில் மேலும் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கிருந்த உரிமையும் தமிழ் மொழிக்கு இருந்த உரிமையும் கூட இன்று சுதந்திரமடைந்தபின் இல்லாமல் செய்வதாயின் இலங்கை பெற்ற சுதந்திரம் தமிழ்பேசும் மக்களுக்கு இல்லையா என்றே கேட்கத் தோன்றுகிறது.

எதற்காகவோ எங்கேயோ செல்லும் வழியில் சோல்பரிபிரபு இப்பொழுது இலங்கைக்கு வந்துள்ளார். இலங்கையின் கவர்னராக இருந்து சுதந்திரமடைந்தபின் சுதந்திர இலங்கையின் கவர்னர்ஜெனரலுமாகப் பதவி வகித்தவர் அவர். இலங்கையின் இன்றைய அரசியல் திட்டத்தை இலங்கைக்கு அளித்த பெருமையும் அவருக்கே உரியது.

இன்று இலங்கையில் அவரது அரசியல்திட்டம் என்ன முறையில் செயல்படுகிறதென்பதையும் இங்கு அரசியல் என்ன பாடுபடுகிறதென்பதையும் சோல்பரிபிரபு அறியாமலிருக்க முடியாது. "இனி என்ன செய்ய முடியும்?" என்று அவர் நினைக்கக் கூடும். என்றாலும் நண்பனாக இங்கு வந்து தங்கியிருக்கும் சோல்பரிபிரபு கவர்னர்ஜெனரலிடமும் பிரதமமந்திரியுடனும் பேசும்பொழுதாவது தமது அரசியல் திட்டத்தினால் நேர்ந்துள்ள [illegible] தங்களையும் அவற்றை எப்படி நீக்கலாம் என்பதையும் நட்புமுறையிலாவது சொல்லி இலங்கைத் தலைவர்களின் மனதை மாற்றுவதற்கு முயற்சி செய்தால் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த பாபத்துக்குப் பிராயச்சித்தம் செய்ததாகும்.

இலங்கையின் அரசியல் திட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும் இலங்கையைக் குடியரசு நாடாக்க வேண்டுமென்றும் 1956-ம் வருடம் தொடக்கம் முயற்சி செய்துவரும் சுதந்திரக்கட்சி அரசாங்கம் தவறு செய்தவரிடமே தவறுக்குப் பரிகாரமும் கேட்கலாம். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் பேசும் தலைவர்களும் அரசியல் திட்டம் தமிழ்பேசும் மக்களை என்ன நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறதென்பதையும் சோல்பரிபிரபுவுக்கு விளக்கி வைக்கலாம்.

தபால்தந்தி அதிபர் அலுவலகத்தில் தமிழ்மொழிப்பகுதியை மூடிவிடும் முயற்சி இதர இலாகாக்களுக்கும் தொற்றுநோய் போல பரவக் கூடுமென்பதையும் இதனால் தமிழ்பேசும் மக்களின் வெறுப்பையே தேடிக் கொள்ள முடியுமென்பதையும் உணர்ந்து இம்முயற்சியை முளையிலேயே கிள்ளி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் "அநீதி இழைக்கமாட்டேன்" என்ற தமது வாக்குறுதியையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியதும் பிரதமரின் கடமையாகும்.

தமிழ்நாடு முனிசிபல் தேர்தல்

# காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

## தமிழ்நாடு கட்சியின் தீர்மானத்துக்கு மத்தியக் கமிட்டி அங்கீகாரம்

புதுடில்லி, ஜன. 17

**அடுத்த மாதம் தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் முனிசிபல் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிப்பதென்று, தமிழ்நாடு கம்யூனிஸ்ட்கட்சி செய்துள்ள முடிவை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் கமிட்டி பொதுவாக அங்கீகரித்தது.**

ராஜ்ய நிர்வாகக் கமிட்டியிலேயே இது சம்பந்தமாக இருவிதக் கருத்துக்கள் இருப்பதாக ஸ்ரீ பி. ராமமூர்த்தி தெரிவித்தார்.

தேசிய கவுன்சிலின் பெங்களூர் கூட்டத்தில் விதிக்கப்பட்ட மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டு, முனிசிபல் தேர்தல்களில் போட்டியிட வேண்டுமென கமிட்டி தீர்மானித்தது. கட்சியை மேற்கொண்டு பலப்படுத்துதல், காங்கிரஸின் ஏகபோக அதிகாரத்தைப் பலவீனப்படுத்துதல், வலதுசாரி பிற்போக்காளர்களை முறியடித்தல் ஆகிய மூன்றுமே இந்த நிபந்தனைகள்.

எனவே, தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள பிற்போக்கு முக்கூட்டு அணியை முறியடிப்பதற்கும், கட்சியையும ஜனநாயக சக்திகளையும் பலப்படுத்துவதற்கும் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்கவேண்டுமென்றும், தமிழ்நாடு கமிட்டி செய்த முடிவு சரியானதுதான் என்றும், ஆனால் காங்கிரஸுடன் பொதுவாக ஒரு கூட்டு முன்னணி அமைக்கக் கூடாது என்று தமிழ்நாடு கமிட்டி செய்த முடிவை அங்கீகரிப்பதாகவும் மத்திய கமிட்டி தீர்மானித்தது.

முனிசிபல்ஸ்தாபனங்கள் மீது காங்கிரஸுக்குள்ள ஏகபோக ஆதிக்கத்தை குறைக்கவேண்டுமென்ற குறிக்கோளை தமிழ்நாடு கட்சி மறந்துவிடக்கூடாதென்றும் வற்புறுத்தப்பட்டது.

கட்சியின் மூன்று விதிகளுக்குட்பட்டு எந்த காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரிக்க வேண்டுமென்று ராஜ்யக கமிட்டி தீர்மானிக்கிறதோ, அவர்களை மட்டுமே ஆதரிக்க வேண்டும் என்றும், முக்கூட்டு அணியை எதிர்த்து எல்லா காங்கிரஸ் அபேட்சகர்களுக்குமே ஆதரவளிப்பதென்ற பேச்சே இல்லையென்றும் மத்திய கமிட்டி தீர்மானித்தது. இது கட்சியின் விஜயவாடா தீர்மானத்திற்கு முரணானது என்று ஸ்ரீ பி. ராமமூர்த்தி, ஸ்ரீ ஏ. கே. கோபாலன, மற்றும் சில இடதுசாரி அங்கத்தினர்கள் ஆகியோர் ஆட்சேபித்தனர். தீர்மானத்தின்மீது வாக்கெடுக்கப்பட்டதில், இடதுசாரி கோஷ்டியினர் நாலைந்து வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர்.

## டோக்கியோவில் நவீன நாடக அரங்கு

கொழும்பு, வெள்ளி

உலகத்தின் தலைசிறந்த நவீன உபகரணங்களடங்கிய நாடக அரங்கொன்று டோக்கியோவில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்பீரியல் அரண்மனைக்கு அருகாமையில் உள்ள இந்த நாடக சாலைக்கு 'நிசி' எனப் பெயரிட்டுள்ளனர். இக்கட்டடம் பூமிக்குள் 5 கட்டடங்களையும், மேலே 8 கட்டடங்களையும் கொண்டுள்ளது. இக்கட்டடம் பூர்த்தியாவதற்கு 6000? லட்சம் 'யென்' செலவாகியுள்ளது. இந்த நாடக அரங்கு உலகத்தில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் ஒன்றாகும்.

ஒரே தடவையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மும்மொழிகளில் மொழி

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## இதுதான் மரியாதை வாரமா?

சென்ற சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் சத்திரத்துறை வீதியில் நாகவிகாரைக்கு முன்னால் இருக்கும் பஸ் தரிக்கும் இடத்தில் பஸ்சுக்காகக் காத்து நின்றோம். அப்போது பருத்தித்துறை நோக்கி வந்த இரண்டாவது பஸ்ஸில் ஏறமுயன்றோம். அதுவேதான் அன்றைய கடைசி பஸ்சும் கூட. பஸ்ஸினுள் எட்டுப் பத்துப் பேர்களைத்தவிர சனநெருக்கமோ வேறு தொல்லையோ எதுவும் இல்லை. எங்கள் கைகளிலும், தோள்களிலும் பார்சல்களும், வேறு பாரமான சாமான்களும் இருந்தன. ஆனால் பஸ்ஸின் படிகளில் வைத்து கண்டக்டரின் காலால் தடுக்கப்பட்டோம். பணம் தந்தால்தான் உள்ளே விடமுடியுமென்று சொன்னார். சாமான்களை உள்ளே வைத்துவிட்டு பணம் தருவதாகக் கூறினோம். முடியாது என்று தடுத்து அவரும் டிரைவரும் சேர்ந்து ஏதேதோ வெல்லாம் பேசினார்கள். அதே நேரத்தில் எதிர் பாராத வண்ணம் பஸ்சினுள் இருந்த கழுத்தில் கைக்குட்டை அணிந்த இ. போ. ச. உத்தியோகத்தர் ஒருவரின் கைத்கள்ளுக்கு ஒருவரும் வாய்ப் பேச்சுக்கு இருவரும் பலியானோம். ஆகவே பிரயாணிகளை அதுவும் இப்படியான அகால வேளைகளில் இம்மாதிரிநடத்துவது வேண்டுமென்றே அவமரியாதை செய்வதுபோல் தெரிகிறது. இதுபோன்ற விடயங்கள் இனி மேலும் நடந்து பிரயாணிகள் அவதிக்குள்ளாகாது கவனிக்கும்படி இ. போ. ச. பொறுப்பாளர்களைத் தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
க. இராசதுரை
சு. தம்பிராசா.

புத்தூர்.

## ஆசிரியர் சம்பளப்பட்டியல்

1-1-64 தொடக்கம் சம்பளப் பத்திரமும் அத்துடன் அனுப்பப்படும் கடிதங்களும் சிங்களத்தில் எழுதப்படவேண்டுமென மத்திய மாகாண உதவி வித்தியாதிபதி அறிவித்துள்ளார். எங்கள் பாடசாலையில் 1-1-64 தொடக்கம் சிங்கள ஆசிரியர் கடமையாற்றுகிறார். இந்நிலையில் நாம் என்ன செய்வது? வழமைபோல் ஆங்கிலத்திலேயே சம்பளப்பத்திரம் எழுதி அனுப்பியுள்ளோம். இதனை சத்தியாக்கிரக ரீதியாக எதிர்ப்பது தவிர வேறு வழியில்லை. சில பாடசாலைகள் சிங்களத்தில் சம்பளப் பத்திரம் எழுதத் தொடங்கினால் எங்கள் உரிமைகள் பறிபோவதோடு காட்டிக் கொடுத்தவர்களாகவும் மாறிவிடுவோம். அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் சிங்களத்தில் சம்பளப் பட்டியல் தயாரித்தால் சம்பளமெடுப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளது. வடமாகணத்தில்உள்ளதமிழ்ப் பாடசாலைகள் தமிழிலேயே சம்பளப்பத்திரம் எழுதுகின்றன. மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளும் தமிழிலேயே எழுதி வருவதாக அ. இ. அரசினர் பாடசாலை த. ஆ. சங்கக் காரியதரிசி திரு. மகாலிங்கம் யாழ்ப்பாண முற்றவெளிக் கூட்டத்தில் கூறியுள்ளார். அப்படியானால் ஏனைய மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளும் குறிப்பிட்ட ஒரு திகதியிலிருந்து தமிழில் எழுதினாலென்ன? எனவே சங்கங்கள் எல்லாம் ஒருமித்து நடவடிக்கை எடுத்து ஒரு குறிப்பிட்ட திகதியிலிருந்து சம்பளப் பட்டியல்களை தமிழில் எழுதுவதைத் தொடங்கவேண்டும். அவற்றிற்கு முன்னோடியாக பெயர்ப்பைக் கேட்கக்கூடிய கருவிகள் ஒவ்வொரு ஆசனத்திலும் பொருத்தப்பட்டுள்ளன.

## கலை மண்டபத் திறப்புவிழா

பருத்தித்துறை, சனி

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மணடபத் திறப்புவிழா இன்றைய தினம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யோகிராஜ ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த யோகீஸ்வர சுவாமிகள் தலைமையில் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் மண்டபத்தைத் திருவாளர் கோ. ஆழ்வாப்பிள்ளை திறந்து வைப்பார்.

## கண்டி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சைவமகாசபைத் தலைவர் கலாநிதி க. வித்தியானந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மத்திய மாகாண இந்துக் கல்விச் சபையின் தலைவருமான திரு. எஸ். பி. வைத்திலிங்கம், யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா, இராசவாசல் முதலியார் என். கனகநாயகம் ஆகியோர் இன்று சாட்சியமளிக்கின்றனர்.

மத்திய மாகாணத் தமிழ் பேசும் மக்களின் சமய, கலாசாரத்தை வளர்க்கும் நிலையமாகச் சுமார் 25 வருடகாக இக்கட்டடம் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்புத் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

7 இடங்களும், வைத்திய, சுகாதாரத்துறையில் 5 இடங்களும், தொழிலாளர் தொழிற் சங்கத்துறையில் 4 இடங்களும் இதில் இடங்கும்

4 பிரிட்டிஷ் தொழில்நுட்ப நிபுணர்கள் இலங்கைக்கு அளிக்கப்பட்டனர். கல்லோயா அபிவிருத்திச்சபை, கொழும்பிலுள்ள டெலிபோன் கந்திப் போக்குவரத்து, மீன்பிடி இலாகா ஆகியவற்றுககு இந்த நிபுணர்கள் உதவிபுரிந்தனர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட இரண்டாவது வைத்தியக கல்லூரிக்கு 18,000 பவுண் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் 9,000 பவுண் பெறுமதியான உபகரணங்கள் இதற்கு வழங்கப்படவிருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் பொறியியல் பகுதிக்கு ஆர்டர்செய்யப்பட்ட 24,500 பவுண் உபகரணங்களில் 3000 பவுண் பெறுமதியான உபகரணங்கள் ஏற்கனவே அளிக்கப்பட்டுவிட்டன.

ஆசிரியசங்கங்கள் பின் வரும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தாய்ச்சங்கங்கள் தங்கள் கிளைச்சங்கங்களுக்கும் சகல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் குறிக்கப்பட்ட ஒரு திகதியிலிருந்து தமிழில் சம்பளப் பட்டியல்களை எழுதுமாறும் சகல கடிதப் போக்குவரத்துகளையும் 1-1-64ல் இருந்து தமிழில் வைத்துக்கொள்ளுமாறும் சுற்றுநிருபங்களை எழுதவேண்டும்.

சிங்களத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டால், எல்லாப் பாடசாலைகளும் எங்கள் சங்கத் தீர்மானத்தின்படி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒரே பதிலை எழுதுமாறு சகல பாடசாலைகளுக்கும் சங்கம் அறிவிக்கவேண்டும்.

இவ்விஷயத்தில் அகில இலங்கை அரசினர் பாடசாலைகளைத் தமிழர் ஆசிரியர் சங்கம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் என்பன ஒன்று சேர்ந்து ஒரே திகதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும். முஸ்லிம் ஆசிரிய சங்கத்தையும் தூண்டவேண்டும். தமிழர்களின் மற்றைய ஆசிரிய சங்கங்களையும் சேர்த்துத தீர்மானித்து விரைவில் இதனைச் செய்தல் மிக அவசியமானது.

க. தம்பிராசா,
உபதலைவர்,
மாதகலை வட்டாரத் [illegible] சங்கம்

# ஸான்ஸிபாரில் அமெரிக்க பிரஜைகளுக்கு வீட்டுக் காவல்

## யு. எஸ். உறவுகளை புதிய குடியரசு முறித்துக் கொண்டது

### அமெரிக்கத்தூதரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்

ஸான்ஸிபார், ஜன. 17

**ஸான்ஸிபாரில் அமெரிக்கத்தூதர், தூதராலயத்தின் 3-வது காரியதரிசி உட்பட எல்லா அமெரிக்கப் பிரஜைகளும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். ஜனாதிபதி அபித்கரும் நேரடியாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.**

அமெரிக்காவுடனுள்ள சகல உறவுகளையும் புதிய ஸான்ஸிபார் அரசாங்கம் நேற்றிரவு முறித்துக் கொண்டுவிட்டது. தமது நாட்டில் அமெரிக்க ராஜதந்திரிகள் சதியிலீடுபட்டிருந்ததாய் புதிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

திரு. அபித்கரும், தங்கனீகாவிலிருந்து திரும்பியதும் இந்த தடுப்புக்காவல் நடவடிக்கைகளும் அமெரிக்காவுடன் உறவுகளை முறித்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையில் கானா, எதியோப்பியா, கியூபா ஆகிய நாடுகள் புதிய ஸான்ஸிபார் அரசாங்கத்தை அங்கீகரித்துள்ளன.

ஸான்ஸிபாரில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் ஸான்ஸிபார் நகரிலிருந்து வெகுதூரத்தில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புரட்சி நடைபெற்ற பின்னர் நேற்றுத்தான் மக்கள் இரவுவேளைகளில் நடமாடத் தொடங்கினர்.

"ஸான்ஸிபாரில் பழைய அரசாங்கத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டோம். குடியரசு பிரகடனமாகி எல்லாம் அருமையாக நடந்துவருகிறது: புரட்சி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஊட்டியிருக்கிறது" என புதிய ஜனாதிபதி அபித்கரும் கூறினார்.

"எங்களுக்கு நண்பர்கள், விரோதிகள் என்று யாரும் கிடையாது. எல்லோருடனும் ஒத்துழைக்க விரும்புகிறோம். நாங்கள் எல்லா ஆபிரிக்க விடுதலை இயக்கங்களையும் ஆதரிப்பது இயற்கையே" என புதிய பிரதமர் அப்துல்லா காஸிம் ஹங்கா கூறினார்.

ஸான்ஸிபாரில் நிலைமை நன்றாகத் தெளிவுபட்ட பின்புதான், புதிய புரட்சி அரசாங்கத்தை அங்கீகரிப்பதுபற்றி பிரிட்டன் யோசிக்க முடியும் என காமன்வெல்த் உறவுமந்திரி திரு. டங்கன்சாண்ட்ஸ் காமன்ஸ்சபையில் தெரிவித்தார்.

ஜான் ஒகெல்லோ என்ற ஒருநபர், தன்னை ஸான்ஸிபார் குடியரசின் "பீல்ட் மார்ஷல்" எனக் கூறிக் கொண்டு புரட்சி அரசாங்கத்துக்கு பிரிட்டனின் அங்கீகாரத்தைக் கோரியிருப்பதாய் திரு. சாண்ட்ஸ் மேலும் கூறினார்.

கினியாவைச் சேர்ந்த ஜான் ஒகெல்லோ என்ற லுவோ மலைஜாதிக்காரர் ஒருவர்தான் புரட்சியை நடத்தியதாக நம்பப்படுகிறது.

புரட்சியை அடுத்துக் காவலில் வைக்கப்பட்ட ஆசியமாதரும் குழந்தைகளும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். ஆண்கள் மட்டும் காவல்முகாமிலேயே இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஸான்ஸிபார் ஆஸ்பத்திரிகளில் 560க்கு மேற்பட்ட காயமடைந்தோர் இருப்பதாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் கூறினர்.

மாஜிநீதிமந்திரி திரு. ஷேக் ஜுமா அலியும் மற்றும் மூவரும் தூக்கிலிடப்படுவார்கள் என பீல்ட்மார்ஷல் ஒகெல்லோ ரேடியோ மூலம் அறிவித்தார்.

தங்கனீகா, கென்யா, உகண்டா ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஸான்ஸிபார் நிலைமை குறித்து விவாதித்தனர். இம் மூன்று நாடுகளும் சேர்ந்த கிழக்கு ஆபிரிக்க சமஷ்டிக்கு தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

## காஸ்ட்ரோவின் மர்ம விஜயம்!

மாஸ்கோ, ஜன. 17

கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோவின் விஜயம் பற்றியும், அவரது நடமாட்டம்பற்றியும் ரஷ்யப் பத்திரிகைகள் இரகசிய மௌனம் சாதிக்கின்றன. காஸ்ட்ரோ, தற்போது குருஷ்சேவுடன் வேட்டையாடிப் பொழுது போக்குவதாக நம்பப்படுகிறது. டாக்டர் காஸ்ட்ரோ, கடந்த திங்கட்கிழமை திடீரென ரஷ்யாவுக்கு விஜயம் செய்தார். எவ்வளவு காலம் அவர் சோவியத் யூனியனில் இருப்பார் என இன்னும் தெரியவில்லை.

---

## அரிசிக்கு அங்கீகாரம்

வாஷிங்டன், ஜன. 17

75,00,000 டாலர் பெறுமதியான அரிசியை சோவியத் ரஷ்யாவுக்கு விற்க அமெரிக்க வர்த்தக இலாகா நேற்று அங்கீகாரம் அளித்தது. 1,55,00,000 டாலர் பெறுமதியான கோதுமையை விற்கவும் அது அங்கீகாரம் அளித்தது. ரஷ்யாவுக்கு விற்கப்படவிருக்கும் அமெரிக்க கோதுமையின் மொத்த மதிப்பு 28,60,00,000 டாலர்களாகும்.

---

## சைபிரஸில் ஐ. நா. மேற்பார்வையாளர்

### இந்தியர் நியமனம்

நியூயோர்க், ஜன. 17

காஸாவில ஐ. நா. படைகளுக்குத் தலைமை வகித்த இந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் கியானியை, சைபிரஸில் ஐ.நா. மேற்பார்வையாளராக யுதாண்ட் நியமித்திருக்கிறார். கியானி, காஸாவில் செய்துள்ள திறமையான சேவைகளை அவர் மிகவும் புகழ்ந்துரைத்தார்.

---

## இசை மேதை காலமானார்

நியூஓர்லீன்ஸ், ஜன. 17

"ஜாஸ்" இசையின் மேதைகளில் ஒருவர் எனக் கருதப்பட்ட ஜேக் டீகார்டன், இங்குள்ள ஹோட்டல் ஒன்றில் காலமானார். உயர்ந்த தோற்றமும், அகன்ற தோள்களும் உடைய இவருக்கு வயது 58. டெக்ஸாஸில் பிறந்த இவர், 7 வயதிலேயே இசைக் கருவியை மீட்டலானார்.

---

## செக். நீதி மந்திரி

புதுடில்லி, ஜன. 17

இந்தியா வந்துள்ள செக்கோஸ்லோவேகிய நீதி மந்திரி ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை நேற்றுச் சந்தித்தார். பின், பிரதம நீதிபதியாக நியமிக்கப் படவிருக்கும் திரு. கஜேந்திர கட்கரையும் அவர் சந்தித்தார்.

## பனமா தூதராலய ஊழியர் திருப்பியழைக்கப்பட்டனர்

### அமெரிக்க - பனமா தகராறு

பனமா, ஜன. 17

அமெரிக்காவில் பனமா தூதராலயத்திலுள்ள சகல ஊழியர்களையும் பனமா திருப்பியழைத்துக்கொண்டது. இவ்வாறு அமெரிக்காவும் செய்யுமாறு அது கேட்டுக்கொண்டது.

இரு நாடுகளுக்குமிடையே நடைபெறும் சமரசப் பேச்சுகளில் கால்வாய்ப் பிரச்னை இடம் பெறவேண்டும் என்றும் அமெரிக்கா இதற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்றும் பனமா கோரியிருக்கிறது.

பனமா பற்றி அமெரிக்காவின் கொள்கையில் மாறுதல் கிடையாதென வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார். பனமாவுடன் சகல பிரச்னைகளைப் பற்றியும் விவாதிக்க அமெரிக்கா தயாராய் இருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

## ஆயுத பரிகரண மகாநாடு

வாஷிங்டன், ஜன. 17

வருகிற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருக்கும் ஜெனிவா ஆயுதப்பரிகரண மகாநாட்டில் அமெரிக்கா புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்கும் என ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்தார்.

---

## நந்தா

புதுடில்லி, ஜன. 17

உள்நாட்டு மந்திரி திரு. நந்தா நேற்று பிரபல தொழில் அதிபர்களைச் சந்தித்து லஞ்ச ஊழல்பற்றிப் பேசினார். லஞ்சம் வாங்குபவர்கள்மட்டுமன்றி கொடுப்பவர்களும் செம்மையாகத் தண்டிக்கப்படுவார்கள் என அவர் கூறினார்.

## கிழக்கு பாகிஸ்தானில் மேலும் தீவைத்தல்கொள்ளைசம்பவங்கள்

### துப்பாக்கி பிரயோகத்தில் ஐவர் பலி

டாக்கா, ஜன. 17

கிழக்குப் பாகிஸ்தானில் மேலும் பல தீவைத்தல், கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகின்றது. நேற்று நாரயண்கஞ்சில் ஒரு ஆலைக்குத் தீமூட்ட முயற்சிக்கப்பட்டது. பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 5 பேர் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நாராயண்கஞ்சிலும், டாக்காவின் புதிய சில பகுதிகளிலும் மேலும் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. புதுடில்லியில் 3 தொழிற்கட்சித் தலைவர்கள் உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவை நேற்றுச் சந்தித்து, கிழக்குப் பாகிஸ்தானில் மைனாரிட்டிகள் நிலைமை குறித்து விவாதித்தனர்.

கல்கத்தாவில் புதிய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லையென அறிவிக்கப்படுகின்றது. எனினும் ராணுவமும், பொலிஸும் தொடர்ந்து கண்காணிப்பு செய்துவருமென முதன்மந்திரி திரு. பி. ஸி. சென் அறிவித்தார். பல்லாயிரம் சிறுபான்மையினர் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாயும் அவர் கூறினார். கல்கத்தாவில் ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டிருக்கிறது. இன்றுமுதல் மாலை 5 மணி தொடக்கம் காலை 6 மணிவரை மட்டுமே ஊரடங்குச்சட்டம் அமுல்நடத்தப்படும்.

முதன்மந்திரி திரு. சென் தலைமையில் நேற்று சமாதானக் கமிட்டி ஊர்வலம் கலகப் பகுதிகளில் அணிவகுத்துச் சென்றது. முதன்மந்திரி இக்கூட்டத்தில் பேசும்போது, அமைதியை நிலைநாட்டுமாறு, மக்களைக் கேட்டுக்கொண்டார்.

முஸ்லிம்கள் அச்சமின்றி ரம்ழான் பெருநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கலகத்தினால் நாசமாக்கப்பட்ட சிறுபான்மையினரின் வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்ள மேற்கு வங்க அரசாங்கம் நிதியுதவி அளிக்க முன்வந்திருக்கிறது. மத்திய அரசாங்கம் பல்லாயிரக்கணக்கான பால் பௌடர் டின்களையும், கம்பளிகளையும் மற்றும் பல பொருட்களையும் அகதிகளுக்கு வழங்கியிருக்கிறது. காஷ்மீர் அரசாங்கம் ரூ. 50,000 அகதிகள் நிவாரணத்திற்கு வழங்கியிருக்கின்றது. 5000 போர்வைகளையும், அதேயளவு வேஷ்டிகள், சேலைகளையும், பால் பௌடர்களையும் மகாராஷ்டிர அரசாங்கம் வழங்கியிருக்கின்றது.

## அராபிய கூட்டுப்படைகளுக்கு எகிப்தியர் தலைமை வகிப்பார்

கெய்ரோ, ஜன. 17

ஒரு எகிப்தியரைப் பிரதம சேனாதிபதியாகக் கொண்டு, அராபிய கூட்டு ராணுவபீடம் ஒன்றை அமைக்க இங்குகூடிய அராபியத் தலைவர்கள் முடிவு செய்ததாக கெய்ரோ பத்திரிகை "அல்அஹ்ராம்" கூறியது. இப்பதவிக்கு ஒரு ஈராக் தளபதியை நியமிக்க ஐக்கிய அராபியக் குடியரசு முயன்றதாயும் ஆனால் மகாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் ஒரு எகிப்தியர்தான் தலைமை வகிக்க வேண்டும் என வற்புறுத்தியதாயும் அப்பத்திரிகை மேலும் கூறியது.

கூட்டு ராணுவ அமைப்பு பூர்த்தி செய்யப்பட்டு ஒரு மாதத்தில் அதன் திட்டங்கள் பற்றி அறிவிக்கப்பட வேண்டும் என அராபியத் தலைவர்கள் சிபார்சு செய்தனர்.

அராபியத் தலைவர்களின் முடிவு அமுல் நடத்தப்படுவதை மேற்பார்வை செய்ய ஒருவிசேஷ குழு அமைக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டதாயும் "அல அஹ்ராம்" கூறியது.

## கோவா அசெம்பிளியில் மொழித் தகராறு

### முதன்மந்திரி விட்டுக்கொடுத்ததால் பிரச்னை தீர்ந்தது

பஞ்சிம், ஜன. 17

**ஆங்கிலம் அல்லது ஹிந்தி புரியாத அங்கத்தினர்கள், மராத்தி அல்லது கொங்கணியில் பேசலாமா என்பதுபற்றி கோவா அசெம்பிளியில் பலத்த சர்ச்சை நடந்தது.**

அலுவல்கள் ஆரம்பமானதும் சபாநாயகர் ஸ்ரீ ஷிரோதகர், ஆங்கிலம் அல்லது ஹிந்தி தெரியாத அங்கத்தினர்கள் என்ன மொழியில் பேசலாம் என்பது முடிவாகும்வரை அவரவர்கள் தங்கள் தாய்மொழியிற்பேசலாமென கூறினார் பின்னர் முதல் மந்திரி ஸ்ரீ பண்டோட்கர், கவர்னர் உரைமீது விவாதத்தை ஆரம்பித்துவைத்து மராத்தியில் பேசினார். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஸெக்குவீரா, மராத்தி புரியாதவர்களுக்காக முதல் மந்திரியின் பிரசங்கம் உடனடியாக மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்றும், இல்லையேல் அவர் கொங்கணியில் பேசலாம் என்றும் அது பெரும்பாலோருக்குப் புரியும் என்றும் கூறினார்.

சட்ட மந்திரி திரு. ஸ்ரீ பெர்ணண்டஸ், கொங்கணியில் பேசினால் சில சிரமங்கள் எழும் என்றும், தஸ்தாவேஜுகளில் அம் மொழியில் பேசப்படும் பிரசங்கங்கள் குறிக்கப்படுவதில்லை என்றும் கூறினார்.

முதன்மந்திரி என்ன சொல்கிறாரென்பது புரியாமல் சபையில் இருப்பதில் அர்த்தமில்லையென்றும், தாங்கள் வெளியேறப்போவதாயும் எதிர்க்கட்சியினர் அறிவித்தனர்.

முதன்மந்திரியின் தாய்மொழி என்னவென்று சபாநாயகர் கேட்டார். ஸ்ரீ பண்டோட்கர் பதிலளிக்கையில் தமது தாய்மொழி மராத்தி என்றும், கொங்கணி மொழி மராத்தியிலிருந்து பிறந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## தொழில்முறைக் கல்வியின் அவசியம்

கிளிநொச்சி, வெள்ளி

"நாம் கடமையாற்றும் கிராமங்களுக்கேற்ற பொருளாதாரத தொழில்முறைக் கல்வியையும் கலாச்சார பண்பாட்டுக் கல்வியையும் அளிப்பதினல் நாட்டின் பல பிரச்னைகளுக்கு முடிவுகாண முடியும்" என்று திரு. த. சிதம்பரப்பிள்ளை கிளிநொச்சித் தொகுதி நிரந்தர ஆசிரியர் சங்கத்தின் மூன்ருவது பொதுக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை திரு. மகாராசா தலைமையில் கிளிநொச்சி சென்திரேசா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது பேசுகையில் குறிப்பிட்டார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. கதிரவேலு, உப-தலைவர்: திரு. வே. சின்னத்தம்பு, காரியதரிசி: திரு த. சிதம்பரபிள்ளை, உப-காரியதரிசி: திரு. செ. நராசா, தனதிகாரி: திரு. சி. வைரவநாதர்.

## பண்டகசாலைகளின் பொறுப்பு

சுழிபுரம், சனி

சுழிபுரம் குகன் ஐக்கிய பண்டகசாலை பொதுக்கூட்டம் திரு. இ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு உத்தியோகஸ்தர் திரு மு. பாலசுப்பிரமணியம் பேசுகையில் கூட்டுறவு பண்டகசாலைகள் மூலம் மக்கள் தங்களுக்கு "வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை நியாயமான விலையில் வாங்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் எல்லா மக்களும் நன்கு பயனடையக்கூடிய வசதிகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவின்போது பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஆ. முருகர், உப தலைவர்: திரு. இ. சதாசிவம், காரியதரிசி: திரு.நா. சதாசிவம், உப காரியதரிசி: திரு க. சின்னையா, தனதிகாரி, திரு. மு. தம்பிஐயா.

## மீண்டும் நட்புறவு

நாம்பொன், ஜன. 17

கம்போடியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே மீண்டும் நட்புறவு ஏற்படுமென்றும், கம்போடியாவுக்கான உதவிகளை அமெரிக்கா நிறுத்திக்கொண்ட போதிலும் கம்போடியா சீனவுடன் சேர்ந்துவிடாது என்றும் கம்போடிய பிரதமர் இளவரசர் சிகானுக் அறிவித்துள்ளார்.

## புதுமைப் பொங்கல்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 16-ம் திகதி புதுமையான பொங்கல் விழா ஒன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை மக்கள் முன்னேற்ற இயக்கத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நடத்தினர்கள். இப்பொங்கலுக்குத் தேவையான அரிசியை இவர்கள் வீடுவீடாகச் சென்று இரந்துவாங்கினர்கள். இவர்கள் தம்மோடு இரப்பதற்காக எடுத்துச் சென்ற பாத்திரத்திலே "இல்லாமை இல்லாது ஆக்குவோம்" என்ற வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது.

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு. விசாகரத்தினம் "மக்கள் உள்ளத்திலே கருணை இருக்கிறது என்பதை அவர்கள் எமக்கு உவந்தளித்த ஒருபிடி அரிசியிலிருந்து அறிகிறேம். பூஜ்பமே பூரணம் என்பதே எமது இலட்சியம். கடைசிவரையில் எமது கடமையிலிருந்து நாம் தவறமாட்டோம்" என்று கூறினர். திரு. தேவராசன் மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் குறிக்கோள்கள் பற்றி விளக்கினர். இறுதியில் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## தடுப்புக்காவலில் நிருபர்கள்

அக்ரா, ஜன. 17

பிரிட்டிஷ் நிருபர் ஒருவரையும், கனடிய நிருபர் ஒருவரையும் கான பொலிஸார் தடுப்புக்காவலில் வைத்துள்ளனர்.

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயின் கான விஜயம் சம்பந்தமாக கானவுக்குச் சென்ற இந்த இரண்டு நிருபர்களையும் பொலிஸார் நேற்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு அழைத்துச்சென்று பின்னர் தடுப்புக்காவலில் வைத்தனர். காரணம் அறிவிக்கப்படவில்லை.

## மகாசபை அங்குரார்ப்பணகூட்டம்

நெல்லியடி, சனி

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பருத்தித்துறைக் கிளைக்கான அங்குரார்ப்பண கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மகாசபைத் தலைவர் திரு எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

புலோலி கிழக்கு உத்திரவத்தை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பருத்தித்துறை, உடுப்பிட்டி எம். பி. கள் உட்பட பலபிரமுகர்கள் சொற்பொழிவாற்றுவார் கள்.

## புகைப்பவருக்கு அதிக பிரீமியம்

பிரஸல்ஸ், ஜன. 17

புகைபிடிக்காதவர்களை விட புகைபிடிப்பவர்களுக்கு அதிக இன்சூரன்ஸ் பிரீமியம் வசூலிக்கப்பட வேண்டும் என்று தாம் பெல்ஜிய சுகாதாரமந்திரியைக் கேட்டுக் கொள்ளப் போவதாய் புற்றுநோய் நிபுணரான பேராசிரியர் ஜோஸப் மெய்ஸின் கூறினர்.

பெல்ஜிய பொது சுகாதார இலாகாவின் புற்றுநோய் ஆராய்ச்சிக் கமிஷன் தலைவரான அவர் சகல பாடசாலைகள் பொது மண்டபங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் புகைபிடிப்பதற்குத் தடை விதிக்குமாறும் மந்திரியைக் கேட்டுக் கொள்ளப் போவதாய்க் கூறினர்.

சிகரெட்பற்றிய விளம்பரங்களுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும் சிகரெட் வரியை உயர்த்த வேண்டுமென்றும் புகைப்பதால் ஏற்படும் அபாயம்பற்றி ஒருகல்வி இயக்கம் நடத்த வேண்டுமென்றும் மேலும் அவர் யோசனை கூறியிருக்கிருர்.

## நாய்க்கடி மருந்து

சிட்னி, ஜன. 17

இந்தோனேஷியாவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரின் 14 வயதுப் புதல்வியான கதரீனுக்கு, நாய் கடித்துவிட்டதால் அவசர மருந்துச் சப்ளைகள் பி. ஓ. ஏ. ஸி. ஜெட் விமானமூலம் ஜாகர்த்தாவுக்கு அனுப்பப்பட்டன. ஜாகர்த்தா டாக்டர்களின் அவசர வேண்டுகோளின்மீது இந்த மருந்து ஹொங்காங்கிலிருந்து அவசர அவசரமாக அனுப்பப்பட்டன. இந்த மருந்தை ஏற்றிச் செல்வதற்காக, விமானம் அரை மணி நேரம் தாமதித்தது.

## நிந்தவூர் தொகுதியில் பெரும் வெள்ளம்

அக்கரைப்பற்று, வெள்ளி

அம்பாறை மாவட்டம் பூராவும் கடந்த ஒரு வாரத்துக்கு மேல் இடைவிடாது பெய்து கொண்டு வரும் மழையினல் கிராமக் குளங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தோடுகிறது. 260 அடி நீர் கொள்ளக் கூடிய "சேனநாயக்கா சமுத்திரம்" நிரம்பி வழிந்தோட இன்னும் நான்கு அடிகள் தான் இருக்கிறது. அம்பாரை மாவட்டத்தில் நிந்தவூர் தொகுதி தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உடனடியாக நிவாரண வேலைகளை நிந்தாவூர் தொகுதியில் ஆரம்பிக்குமாறும் சமூகசேவா மந்திரி திரு. டி. குணசேகராவுக்கு நிந்தவூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் விடுத்த அவசர தந்திச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஷசயர் வருகை

கொழும்பு, வெள்ளி

வலது குறைந்தவர்களுக்கென 'ஷசயர் ஹோமை' ஆரம்பித்த குருப்காப்டன் டசௌளஸ் ஷசயர் இன்று இலங்கைக்கு விஜயம்செய்கிருர். இம்மாதம் 29-ம் திகதி வரை இவர் இங்கு தங்கியிருப்பார்.

## ஆண்டுவிழா

வல்வெட்டித்துறை, வெள்ளி

தைப்பொங்கல் தினத்தன்று சரம்பன் கிழக்கு சனசமூக நிலையத்தார், தாங்கள் புதிதாக அமைத்த கட்டிடத்தில், 18-வது ஆண்டு நிறைவு விழாவையும், உழவர் பெருநாளையும் விமரிசையாகக் கொண்டாடினர்கள்.

## சுகர்ணே--கென்னடி பேச்சு

டோக்கியோ, ஜன. 17

டோக்கியோவில் இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்ணேவை, அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனின் விசேஷப் பிரதிநிதி ராபர்ட் கென்னடி சந்தித்துப் பேசினர்.

மலேஸியா பற்றி அமெரிக்கா பெரிதும் கவலைகொண்டிருப்பதாயும், மலேசியா பிரச்னையை ஆசிய நாடுகளே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், வெளிநாடுகள் தலையிடுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அவர் கூறினர்.

பேச்சுவார்த்தைக்குப் பின் திரு. கென்னடி மணிலா செல்வார் ஆனல் தாம் மணிலா செல்வது சுகர்ணேவுடன் நடத்தும் பேச்சுக்களின் விளைவுகளைப் பொறுத்தது என திரு. கென்னடி கூறினர்.

## ஆஸ்பத்திரிக்கு சென்றவர் வழியில் மரணம்

மட்டுவில், வெள்ளி

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக வரும்போது வழியில் மயக்கமுற்று ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். அவரைக் காணமல் கவலையுற்ற அவரது குடும்பத்தினர் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்த மறுநாள் இறந்தவரின் சடலத்தை பற்றை ஒன்றுக்குள் கண்டெடுத்தனர். குறிப்பிட்டவரின் மரணம் பற்றித் தமக்கு எவர்மீதும் சந்தேகமில்லை என அவரின் குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்தனர். இறந்தவருக்கு 85 வயது என்பது குறிப்பிடத்தக்கது.


# சியல்

சிறந்த எழுத்தை விரும்புகிறவர்கள் தெரிந்தெடுக்கும் பேனு



ஏக விநியோகஸ்தர்கள்:

கொழும்பு ஏஜென்ஸீஸ் லிமிட்.,
2வது மாடி, நாஷனல் மியூச்சுவல் கட்டடம்,
சதாம் வீதி, கொழும்பு-1
போன்: 4213 - 15 தபால் பெட்டி இல: 913




இப்போது சுகம், பெலன், சந்தோஷம் இவற்றையும் அளியுங்கள்

சின்னஞ் சிறு சிசு தனக்கு வேண்டிய சக்தியை பிறக்கு முன்பே தன் தாயிடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

ஆனல் வளரும்போதோ அந்த சிறு உடம்பின் வளர்ச்சிக்கு அநேக விட்டமின் சத்துகள் தேவைபடுகின்றன. சுக வளர்ச்சிக்கும், சிறந்த கண்பார்வைக்கும் விட்டமின் A, உறுதியான எலும்புகளுக்கும், பற்களுக்கும் விட்டமின் D, திடமான உடம்பிற்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C தேவைப்படுகின்றன.

**இவ்விட்டமின்கள் அனைத்தையும் உங்கள் குழந்தை பெறுகிறது என்று நீங்கள் எப்படி நிச்சயிக்ககூடும்?**

மீன் எண்ணெயும், தோடம்பழச்சாறும் இவ்விட்டமின் சத்துகள் அடங்கியவைதான். ஆனல் மீன் எண்ணெயின் பிசுபிசு தன்மையின் காரணமாக குழந்தைகளுக்கு அதை ஊட்டுவது எளிதல்ல. மேலும் சில வேளைகளில் மீன் வாடை கொண்ட ஏப்பம் வரக்கூடுமானதால் அநேக குழந்தைகள் இதை உட்கொள்ள விரும்பமாட்டார்கள். ஹலிபோரேஞ் உட்கொள்வதில் இச்சச்சரவுகள் ஏற்படுவதில்லை. குழந்தையின் சுக வளர்ச்சிக்கு வேண்டிய A, D, C விட்டமின் சத்துகள் அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. அது ருசி மிக்கது. (சாதாரண தோடம்பழத்தை விட இனிப்பானது.) மீன் வாடை அல்லது மீன் சுவை அதில் இல்லை. சிசுகளும், சிறு குழந்தைகளும் ஹலிபோரேஞ்சை அதிகம் விரும்புகிருர்கள்.




இளம் பிராயத்தின் ஆரோக்கியத்திற்கு

# ஹலிபோரேஞ்

இதுவே சக்தி மிகுந்த வளர்ச்சிக்கு ஏற்றது

இதோர் ஒளாக்ஸோ அலன்பரீஸ் உற்பத்தி.

AT-735

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 18-1-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 சேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள்.

இரவு 7-00 பாட்டு — லீலாவதி துரைசிங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி — மலாய்பேச்சு, பேச்சு — சக்கத்தின் மாண்பு, இஸ்லாமியகீதம், 9-15 பேச்சு — 'பூமிசாஸ்திரம்', 9-30 பாட்டு — பி. எம். வேதாரண்யம், 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 19-1-64**

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 சேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்த போதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி (மறு ஒலிபரப்பு), 9-00 விசேஷ நிகழ்ச்சி — 'புனித றமழான்', 9-30 திரை இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு — ஸ்ரீதேவி பத்மநாதன், 5-45 திரைக்குரல், 6-15 பாங்கு, 6-30 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாட்டு — எஸ். சண்முகராகவன்,

இரவு 7-15 வீணை, 7-45 நாடகம் — 'தூக்கம் கொடையும்' — ஈழத்து அரங்கினம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, விசேஷ நிகழ்ச்சி — 'மங்கள றமழான் உதயம்', 9-15 மாதர்விருப்பம், 9-45 சேர்ந்தஇசை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

## ஆலய பரிபாலனசபை நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தைப்பொங்கல் தினத்தன்று சபைத்தலைவர் திரு. வே. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே. சோமசுந்தரம், காரியதரிசி: திரு. செ. சுப்பிரமணியம், தனாதிகாரி: திருமதி கண்மணி சதாசிவம், காரியஸ்தர்: திரு. கு. வைரமுத்து.

திரு. சி. செல்லத்துரை, திரு ஏ. சண்முகரத்தினம், திருமதி நமசிவாயம் ஆகியோர் காரிய நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## எதியோப்பியா— சோமாலியா தகராறு

லண்டன், ஜன. 17

3 எதியோப்பிய விமானங்கள் சோமாலியா எல்லையில் மெஷின் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக சோமாலி குடியரசு குற்றம்சாட்டியிருக்கிறது. ஆனால் தங்கள் எல்லையில் சோமாலி, கொள்ளைக்காரர்களுக்கு ஊக்கமளித்து வருவதாயும், சோமாலி விமானங்கள் தாக்குதல் நடத்தியதாயும் எதியோப்பியா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

## "அராபிய உலகில பாகிஸ்தானுக்கு செல்வாக்கில்லை"

பேருட், ஜன. 17

"தனது சொந்தநாட்டில் வாக்கெடுப்பைநடத்தாத பாகிஸ்தான், காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்துமாறு கோருவதற்கு உரிமை கிடையாது" என லெபனன் பத்திரிகை ஒன்று கூறியிருக்கிறது.

அரபுநாடுகள் காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்காதது குறித்து, பாக். வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ குறை கூறியதற்கு இப்பத்திரிகை பதிலளித்திருக்கிறது.

"அரபு உலகில் பாகிஸ்தான் கொள்கைக்கு கௌரவம் இல்லை. பாகிஸ்தானியர்காஷ்மீரில் படையெடுத்ததினால் தான் இந்தியா உதவிக்கு விரைந்தது. மேலும், பாகிஸ்தான் அரபுநாடுகளின் கொள்கைக்கு மாறாக, மேற்கு நாட்டு ராணுவகூட்டுடன் சேர்ந்து கொண்டிருக்கிறது" என்றும் அது கூறியிருக்கிறது.

## விருந்துபசாரம்

நல்லூர், வெள்ளி

வலி-வடக்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றி உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள திரு. ஆ. பெருமையினருக்கு சுன்னாகம் கிராமமுன்னேற்றச் சங்கம் விருந்துபசாரமளித்து கௌரவித்தது.

மாதர் சங்க தலைவி திருமதி ... மார்க்கண்டு தலைமைதாங்கி பேசுகையில் திரு பெருமையினரின் சேவை நலனை பாராட்டினர். கிராமமுன்னேற்றச் சங்க உத்தியோகத்தர் திரு. ஆர். நடேசன் தீவுப்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதினால் அவருக்கும் விருந்துபசாரமளிக்கப்பட்டது.

பண்டிதர் வி. நடராசா, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், சுன்னாகம் பொலிஸ் அதிகாரி திரு. எஸ். எஸ். மூர்த்தி, திரு. ஏ. தம்பிப்பிள்ளை ஆகியோரும் பேசினர். நடனம், இன்னிசைக் கச்சேரி என்பனவும் நடைபெற்றன.

## கோவா . . .

(3-பக்கத் தொடர்ச்சி)

தென்றும் குறிப்பிட்டார்.

இதை எதிர்க்கட்சியினர் பலமாக ஆட்சேபித்து, கொங்கணி மொழி ஒரு தனிமொழியென்று கூறினர். தாய் மொழியை இஷ்டப்படி ஒருவர் பொறுக்கிக்கொள்ள முடியாதென்றும், ஸ்ரீ பண்டோட்கரின் தாயார், கொங்கணி மொழி பேசுகிறார் என்றும், எனவே கொங்கணி மொழியே அவருடைய தாய்மொழி என்றும் ஐக்கிய கோவானியக் கட்சி அங்கத்தினர் ஒருவர் கூறினர்.

தகவல் இலாகா மந்திரி ஸ்ரீ கர்மாலி அங்கத்தினர்களைப் பொறுமையுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டு, மராத்தி பிரசங்கத்தின் சுருக்கத்தைச் சபாநாயகர் ஆங்கிலத்தில் அல்லது கொங்கணியில் சொல்லலாமென யோசனை கூறினர்.


முதன் மந்திரி ஸ்ரீ பண்டோட்கர், இந்த அர்த்தமில்லாத சர்ச்சையில் தாம் நேரத்தை வீணாக்க விரும்பவில்லையெனக் கூறி கொங்கணியில் பேச ஆரம்பித்தார்.

## தமிழ் மாணவர் வெளி நடப்பு

பதுளை, வெள்ளி

பதுளைப் பகுதியில் பாடசாலைகளை திருத்தியமைக்கும் திட்டம் அமுல் செய்யப்பட்டபோதிலும், பாடசாலைகளிலுள்ள தமிழ் பிரிவுகளில் நிலைமை சீரடையவில்லை.

தமிழ் பிரிவை சேர்ந்த 3500 தமிழ் மாணவர்கள், இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கமாக, வகுப்புகளுக்கு செல்லாமல் இருந்து வருகிறார்கள்.




# 3 பொன் உருண்டைகள்

பல நூற்றாண்டுகளுக்கு முன் இத்தாலிய தங்க வியாபாரிகள் தங்க வியாபாரத்தின் ஒரு பகுதியாக ஈடுபிடிக்கும் தொழிலை ஆரம்பித்தனர். இது படிப்படியாக வளர்ந்து லாபகரமான ஒரு தொழிலாக நிலைபெற்றது. தங்கள் ஈடுபிடிக்கும் தொழிலின் அடையாளச் சின்னமாக அவர்கள் 3 பொன் உருண்டைகளை உபயோகித்தினர்.

ஆனால் மக்கள் வங்கி 3 பொன் உருண்டைகளை உபயோகிக்கவில்லை. அதற்கு மாறாக தங்கள் ஈடுபிடிக்கும் சேவையை அளிப்பதில் 3 பொன் விதிகளைப் பின்பற்றுகிறது.

★ சுரண்டுதலிலிருந்து விடுதலை
★ நியாயமான வட்டி விகிதம்
★ உங்கள் பொருட்களை மீட்க சிறந்த சந்தர்ப்பம்

**மக்கள் வங்கி**

221, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தீவெங்கிலும் 32 கிளைக் காரியாலயங்கள் உள்ளன.

STR. PB


## கேள்விப்பத்திர அறிவித்தல்


கிளிநொச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்திற்குக்கிட்டங்கியும் கந்தோரும் அடங்கிய ஒரு கட்டிடம் கட்டுவதற்குக் கேள்விப் பத்திரங்கள் பலநோக்குகூட்டுறவுச்சங்கங்களிலிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 7-2-64 பகல் 12மணி வரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் எனது அலுவலகத்திலிருந்து பெற்ற படிவங்களில் அனுப்பப்படவேண்டும். கட்டிட மாதிரிப்படமும் செலவின விபரமும் எனது அலுவலகத்தில் பரிசீலனைக்குப் பெற்றுக்கொள்ளலாம். யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி (பரந்தன் கிளை) யில் ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சி காண்பிப்பவருக்கே கேள்விப்பத்திர படிவங்கள் வழங்கப்படும்.

மு. சின்னத்தம்பி,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
தென் யாழ்ப்பாணம்.
கூட்டுறவு அலுவலகம்,
பரந்தன், 10-1-64. 1760


## இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் பெற்றோர் சங்கம்


நிகழும் 20-1-64 திங்கட்கிழமையன்று பிற்பகல் 4-00 மணியளவில் ஷெ சங்கங்களின் பொதுக்கூட்டம் இராமநாதன் கல்லூரியில் பாதுகாப்பு ஆலோசனை சபை (Welfare Board) அங்கத்தினரைத் தெரிவுசெய்யும்பொருட்டுநடைபெறும்.

யாவரும் சமுகமளிப்பார்களாக.

அதிபர்,
1883 இராமநாதன் கல்லூரி.


## பாகிஸ்தானியர் ஊடுருவல்

புதுடில்லி, ஜன. 17

இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தானியர் கோஷ்டி ஒன்று ஊடுருவி, விலைமதிப்புள்ள மரங்களை வெட்டியதாயும், பின் காவல் வீரர்களால் அவர்கள் விரட்டியடிக்கப் பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக திரிபுரா அரசாங்கம் கிழக்கு பாகிஸ்தானுக்கு ஆட்சேபனை அனுப்பியிருக்கிறது.

## இலங்கை வரும் பிரமுகர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் இளைஞர் கழகங்கள் எவ்விதம் இயங்கின்றன என்பது பற்றி நேரில் அறிந்து அவற்றுக்கு ஆலோசனை கூறுவதற்காக சர்வதேச இளைஞர் சம்மேளனத்தின் சார்பில் திரு. ஹொராஸ் நாப் இலங்கைக்கு விரைவில் விஜயம் செய்வார்.

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

நெல்லியடி, வெள்ளி

பொங்கல் தினத்தன்று வதிரி 'பஞ்ச்' கிளப்பினரின் 'ஏ' பிரிவுக்கும் 'பி' பிரிவுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி இருபகுதியினருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. திரு. வி. தினகரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். திரு வி. அருளம்பலம் வெற்றிக் கிண்ணமொன்றை 'பஞ்ச்' கிளப்பினருக்கு பரிசாக அன்பளிப்புச் செய்தார்.

## நையாண்டி

தார்-எஸ்-ஸலாம், ஜன. 17

அடைக்கலம் அளிக்கப்பட்ட ஸான்ஸிபார் சுல்தான் இங்கு கரையிறங்கியபோது நூற்றுக்கணக்கான மக்கள் அவரைக் கூச்சலிட்டு நையாண்டி செய்ததாக அறிவிக்கப்பட்டுகிறது.


அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசன இலாகா

என் 54- முத்தையன் கட்டுக் குளக்கட்டு உயர்த்தல், உடைப்புகள் அடைத்தல் ஆகிய வேலைகள். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 18-2-64. என் 81- வவுனியா உப-பிரிவில் சின்னப் பரந்தன் குளம் திருத்த வேலைகள். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 11-2-64. என் 82-வவுனியா உப-பிரிவில் வவுனியாக் குளம் விசேட பராமரிப்பு வேலைகள். கேள்விப் பத்திரங்கள் முடிவு திகதி 11-2-64. என் 83-வவுனியா உப-பிரிவில் இலங்காத்த குளம் திருத்த வேலைகள். கேள்விப் பத்திரங்கள் முடிவு திகதி 11-2-64.

சுகாதார இலாகா

என் 73-1963—63-ம் ஆண்டு அழுக்கு ஆடைகள் சலவை செய்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 11-2-64.

உப்பு இலாகா

என் 78-மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து மட்டக்களப்பிலுள்ள உப்புப் பண்டகசாலைக்கு உப்பு மூடைகளை ஏற்றிச் செல்லுதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 31-1-64.

இதன் முழுவிபரங்களுக்கும் 17-1-64ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

விளம்பரம்

ஈஸ்வர் கோப்பறேஷன் தனது வாடிக்கையாளர்கட்கும் ஆதரவாளர்கட்கும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் தங்கள் புது விலாசத்தையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

**ஈஸ்வர் கோப்பறேஷன்,**
ஸ்ரான்லி வீதி, (வெலிங்டன் படமாளிகைக்கு அருகாமை)
யாழ்ப்பாணம். 1885

தேவை

உள்நாட்டுத் தயாரிப்புகளை விற்பனை செய்யவும் பிரசாரம் செய்யவும் ஆர்வமுள்ள வாலிபர்கள் மனுச்செய்க. அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1876

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்திய பரிசோதகர் ... கோவில் ... யாழ்ப்பாணம்

THE JAFFNA ACADEMY
CHUNDICULI

Admissions for G. C. E. (ordinary level) August 1964 Examination will close on 24-1-64. All admissions after that date will be only for December 1964 Examination.
1884


## நாகாலாந்து தேர்தல் முடிந்தது

கொஹிமா, ஜன. 17

நாகாலாந்தில் நேற்றுடன் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. இன்று வாக்குகள் எண்ணப்பட்டு, வருகிற ஞாயிற்றுக்கிழமை முடிவுகள் அறிவிக்கப்படும். தேர்தலில் 95 சத வீதமானோர் வாக்களித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஜவுளி விற்பனவு நிலையம்

சங்கானை, வெள்ளி

சங்கானை கிழக்கு மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஜவுளி விற்பனவு கிளையொன்றை திரு. ஏ. கே. அழகசுந்தரம் சென்ற புதன்கிழமை திறந்து வைத்தார். துணி வகைகளை விற்பனை செய்வதில் கூ. மொ. வி. ஸ்தாபனம் கட்டுப்பாடு விதித்துள்ளதால் இவ்வித நிலையமொன்று இங்கு அவசியமான தேவையாயிருந்தது.

# ஊசி போடுவதில் வீண் தாமதம்

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்களின் அசிரத்தை காரணமாக வெளி நோயாளர்கள் தினமும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள். குறிப்பாக, ஏற்பு ஊசி போட வரும் நோயாளர்க்ள், ஆஸ்பத்திரி ஊழியரின் அசிரத்தை காரணமாக பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.**

ஏற்பு ஊசி போட்டுக்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் பொறுமையையும் இழந்து அதிக நேரத்துக்கு காத்து நிற்க வேண்டியிருக்கிறது. 'கியூ' வரிசையில் நின்று புண்ணுக்கு மருந்து கட்டிக்கொண்ட போதிலும் ஏற்பு ஊசி போட்டுக்கொள்வதற்கு நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரி ஊழியர்களின் அசிரத்தை காரணமாக சில நோயாளர்கள் ஏற்பு ஊசி போட்டுக்கொள்ளாமலே வீடு திரும்புகிறார்கள்.

காலில் கம்பி வெட்டியதனால் ஏற்பட்ட புண்ணுக்கு ஏற்பு ஊசி போடச் சென்ற மாணவன் ஒருவன், நேற்று மருந்தை மட்டும் கட்டிக்கொண்டு ஏற்பு ஊசி போடாமல் வீடு திரும்பியிருக்கின்றான். குறிப்பிட்ட பாடசாலை மாணவன், ஏற்பு ஊசி போட்டுக் கொள்வதற்கு அதிக நேரம் வரை காத்து நின்று தாதிமார் எவரும் இல்லாததால் பொறுமையையும் இழந்து வீடு திரும்பியிருக்கின்றான்.

ஏற்பு ஊசி, மற்றும் ஊசிகளை போடும் தாதிமார்கள் சேவை நேரத்தில் இல்லாத காரணத்தினால் நேற்று அதிகமான நோயாளர்கள் காலையிலிருந்து பகல் ஒரு மணிக்கு மேல் காத்துநின்றனர். ஊசி போடவரும் நோயாளர்கள் உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லையென்றும் முக்கியமாக ஏற்பு ஊசி போடவரும் நோயாளர்கள் கவனிக்கப்படுவதில் வீண் தாமதம் ஏற்படுகிறதென்றும் நோயாளர்கள் புகார் செய்துள்ளனர்.

# 12 மாடிக்கட்டிடம் இடிந்து விழுந்தது!

லண்டன், ஜன. 16

பாரிஸில் பன்னிரண்டு மாடிக் கட்டடமொன்று நேற்று இடிந்து விழுந்ததென்றும் இந்த விபத்திலிருந்து எவரும் உயிர் தப்பியிருக்கமாட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 பேரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 16 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) நியூ ராஜா! (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (காவத்பிட்டியா) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) ஜெமினி (குருகலை)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!
உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ் - அசோகன்

மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
தயாரிப்பு: ஜி. என். வேலுமணி
டைரக்ஷன்: கே. சங்கர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன் — சரோஜாதேவி நடித்த
கல்யாணப்பரிசு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இஸ்ரேல் சகியாது

டெல் அவிவ், ஜன. 16

ஜோர்டான் நதியை திருப்பி விடும் விஷயத்தில் அரபுநாடுகள் குறுக்கிடுவதை இஸ்ரேல் அனுமதிக்காது என்றும், இத்தகைய முயற்சி நசுக்கப்படுமென்றும் இஸ்ரேல் பிரதமர் கூறினார். இதற்கிடையில் கெய்ரோவில் கூடிய அரபு நாடுகளின் தலைவர்கள் இஸ்ரேலின் முயற்சிபற்றி ஆலோசித்தபின் அரபுநாடுகளின் கூட்டு ராணுவத் தலைமை ஏற்படுத்துவதுபற்றி கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டனர்.

## சிங்களக் கடிதத்தை திருப்பியனுப்பினார்

மன்னார், வியாழன்

கள்ளிகட்டைக்காடு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் திரு. ஏ. ஆர். ஜேம்ஸுக்கு, கொழும்பிலுள்ள விவசாய சேவைக் கமிஷனிடமிருந்து கிடைத்த சிங்களக் கடிதத்தைத் திருப்பியனுப்பியுள்ளார்.

எழுத்துக்கள் எல்லாம் தனிச் சிங்களத்தில் இருப்பதாகவும் தனக்கோ, அல்லது சங்கத்திலுள்ள வேறு யாருக்குமோ, சிங்களம் வாசிக்கத் தெரியாதென்றும் அவர் குறிப்பு எழுதி அனுப்பியுள்ளார். மொழிபெயர்ப்பாவது அனுப்பும்படி கோரியுள்ளார்.

## மந்திரியின் வெளிநாட்டு விஜயம்

கொழும்பு, வெள்ளி

போக்குவரத்து மந்திரி திரு. மகாநம சமரவீர அடுத்த வாரம் ஹொலந்துக்கு புறப்படுவார் எனத் தெரிய வருகிறது,

அந்த நாட்டில் கடலரிப்பு எப்படி தடுக்கப்படுகிறது என்பதை சில நாட்கள் தங்கி ஆராய்வார் என்றும் தெரிய வருகிறது. ஹொலந்துக்குச் செல்லும் வழியில் அவர் கெய்ரோவில் இரண்டு நாட்கள் தங்குவார் என்றும், ஹொலந்திலிருந்து பிரிட்டனுக்குச் செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மகாநமசமரவீரா பிற நாடுகளில் சுமார் ஒரு மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்வார். இவரது சுற்றுப் பிரயாணத்தின் போது இலங்கைக்குத் தேவையான விமானங்களையிட்டு பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் கூறப்படுகிறது.

# இன்று நடைபெறும் பொரளை இடைத்தேர்தல்

## பொலிசாரின் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

சனிக்கிழமை நடைபெறவிருக்கும் பொரளை இடைத்தேர்தலின் போது அசம்பாவித சம்பவங்கள் ஏதும் இடம் பெறாது தடுக்கவும் ஒருங்குக் கட்டுப்பாட்டை நிலை நாட்டவும் கொழும்பு பொலிசார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பு நகர சந்திகளில் ஆயுதம் தாங்கிய பொலிசார் கண்காணித்து வருவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. கலகங்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை பொலிசாரின் தீவிர கண்காணிப்பு இருந்து வரும். கலகம் ஏற்படுத்தக் கூடியவர்களையும் பொலிசார் கண்காணித்து வருகின்றனர்.

சமீபத்தில் இடம் பெற்ற பொரளை மாநகரசபை இடைத்தேர்தலின் சபை கூட்டத்தின் மீது எறிகுண்டு வீசப்பட்டதனால் பலர் காயமுற வேண்டி நேரிட்டது இதனைத் தொடர்ந்தே பொலிசார் கடும் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இன்று இரவே இப்பகுதிகளில் பொலிசார் ரோந்து சுற்றத் தொடங்கினர், பொரளைத் தொகுதியில் அமைக்கப்படும் 17 வாக்குச் சாவடிகளிலும் பொலிசார் நாளை பிற்பகல் 3 மணியிலிருந்து காவல் புரிவர்.

பொரளைத் தொகுதியில் போட்டியிடும் நான்கு அபேட்சகர்களும் தமது இறுதியான பிரசாரக் கூட்டங்களை இன்று நடத்தினர்.

கிகரெட்டியாவில் வெற்றியீட்டியது போல் தமது பொரளைத் தொகுதியிலும் வெற்றி பெறுவது நிச்சயம் என்று அதிகப்படியான வாக்குகளால் தாம் வெற்றி பெறுவது நம்பிக்கையான தொன்று எனவும் யு. என். பி.யினர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் கண்டிப்பாகத் தாம் வெற்றி பெறுவார்களென்றும் யு. என். பி. அபேட்சகரைச் சிறிதளவு தொகையான வாக்குகளாலாவது தோற்கடிப்பது பற்றித் தாம் திடம் கொண்டுள்ளதாகவும் கருத்துக் கொண்டுள்ளார்கள்.

யு. என். பி.யினரும் இடதுசாரி ஐக்கிய முன்னணியினரும் போட்டி தங்களுக்குள்ளேயே தவிர சுயேச்சையாளர்களுடனல்ல எனத் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவில் போட்டியிடும் கமலாடி' சில்வாவுக்கு மூன்றாவது இடமே கிடைக்கும் என யு. என். பி. யினர் அபிப்பிராயப்படுகின்றனர்

ஜாதிக விமுக்தி பெரமுனையின் சார்பில் போட்டியிடமுன் வந்த அபேட்சகர் வாபஸ் செய்து கொண்டதால் யாருக்கும் இது சாதகமாக அமைந்து விடவில்லை. ஏனெனில் அவருக்கு சிறிதளவு வாக்குகளே கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

## சபாநாயகரும் ராஜினாமாவும்

கொழும்பு, வியாழன்

சபாநாயகர் டி. பெல்பொல இந்தியாவுக்கு யாத்திரைக்காகப் புறப்பட்டுச் செல்லுமுன்னர் தமது பதவியை ராஜினமாச் செய்துவிட்டுச் செல்ல வேண்டுமென பார்லிமென்டரி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இது குறித்து திரு. பெல்பொலவிடம் கேட்டபோது தாம் இதுவரை சபாநாயகர் பதவியை ராஜினமாச் செய்யவில்லையென்றும் யாத்திரைக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் திரு. பெல்பொல சபாநாயகர் பதவியை ராஜினமாச் செய்வது உறுதி என்றும் தமது அங்கத்தவர் பதவியை ராஜினமாச் செய்ய மாட்டாரென்றும் அறியப்படுகிறது.

## ரஸ்கின் தீவு சம்பவம்

### விசாரணை தொடர்கிறது

கொழும்பு, வியாழன்

புதுவருட தினத்தன்று பாணந்துறைக்குச் சமீபத்திலுள்ள ரஸ்கின் தீவுக் கடலில் மூழ்கி மாண்டுபோன எட்டு இளம்பெண்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் பொலிஸ் உயர்தர அதிகாரிகளும் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்தச் சம்பவம் சம்பந்தப்பட்ட உண்மையான விபரங்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன என்றும் இதுவரை நடத்தப்பட்ட விசாரணை பூரணமாகவில்லை என்றும் பொலிசாருக்குப் புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவ்விதம் உயர்தர பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

## மலேசியா பற்றி கென்னடி

டோக்கியோ, ஜன. 16

மலேசியா தகராறு குறித்து இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோவுடன் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு அமெரிக்க அட்டோர்னி ஜெனரல் திரு. ரொபர்ட் கென்னடி இன்று டோக்கியோ வந்து சேர்ந்தார்.

திரு. கென்னடி இன்று வெளியிட்ட ஒரு அறிக்கையில்; மலேசியா பிரச்னையை வெளியார் தலையீடின்றி ஆசிய நாடுகளால் தீர்த்துவைக்க முடியுமென்று தெரிவித்துள்ளார். நாளை அதிபர் சுகர்ணோவுடன் அவர் பேச்சுக்கள் நடத்துவார்.

# "எனது திட்டம் அமுலானால் வேலைநிறுத்தங்கள் நடைபெறாது"

## வேலையில்லாத் திண்டாட்டத்தை முற்றாக ஒழிக்க திரு. பீலிக்ஸின் யோசனை!

கொழும்பு, வியாழன்

உணவுவிவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை அமுல் நடத்தினால் இந்நாட்டில் வேலையில்லாத திண்டாட்டம் முற்றாக நீங்கிவிடும். வேலையில்லாத்திண்டாட்ட விஷயமாக மந்திரிசபையின் உபகமிட்டியில் திரு. பீலிக்ஸ் கொண்டுவந்த தீர்மானத்தில் வேலை செய்ய விரும்பும் எல்லோருக்கும் வேலைவசதி செய்து கொடுப்பது முடியக்கூடிய செயல் என்று தெரிவித்திருக்கிறார்.

இத்தீர்மானத்தின்படி வேலை பெறும் பொருட்டு தங்களை பதிவு செய்து கொண்டவர்கள் வீடமைப்புத்திட்டம், புதிய நகரங்களை திருத்துவது உட்பட பெரிய முன்னேற்றத்திட்டங்களால் வேலைபெற முடியும். இவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுமென்றும் இவ்வேலைகளைச் செய்ய விரும்பாதவர்களின் பெயர்கள் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

திரு பண்டாரநாயக்கா மந்திரிசபை உபகமிட்டியிடம் தெரிவித்ததாவது: தற்பொழுது அரசாங்கம் இருபக்கத்தாலும் நெருக்கடியை தாங்கிக் கொண்டிருக்கிறது. ஒருபக்கத்தில் வேலையில்லாதவர்கள் வேலைதரும்படி கோருகிறார்கள். மறுபக்கத்தில் தொழிற் சங்கங்கள் தலையிடி கொடுத்து வருகின்றன. நான் கொண்டுவந்திருக்கும் தீர்மானம் அமுல் செய்யப்படுமானால் வேலைநிறுத்தங்கள் நடைபெறாததோடு, வேலைநிறுத்தம் ஏற்பட்டாலும் முழுவேலைகளும் பாதிக்கப்படாது.

இப்பெரிய திட்டத்திற்கு 20 கோடி ரூபா தேவைப்படுகிறது. இத்திட்டத்தை அமுலாக்குவதற்கு மந்திரிசபை பூரணமாக என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். இத்திட்டத்திற்கான பணத்தைமத்திய வங்கி கொடுத்துதவும்.

கடைசியாக கிடைத்தபுள்ளி விபரங்களின்படி 153,799 பேர்கள் தொழில்கந்தோரில் வேலைக்காக தங்கள் பெயர்களை பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களில் 1962-ம் வருடம் 4,831 பேர்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.